திரு. டி. ஆர். வேங்கடராமன்: தலைவரவர்களே, இன்றைக்கு நவீன அரிசி ஆலைகளில் ஷெல்லரை வைத்துத்தான் அரிசி அரைக்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டும் ஹல்லரை வைத்துத்தான் அரிசி அரைத்துக் கொண்டிருக்கிறார்கள். மக்களுக்கு நன்மை பயக்கும் இந்தத் திட்டத்தை அரிசி ஆலைகள் செயல்படுத்தவில்லை. ஆகவே, இப்படி தவறு செய்கின்ற அரிசி ஆலைகள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவியல் தொழில் நுட்பத்தை எளிதில் ஏற்றுக்கொள்ளச் செய்வது இயலக்கூடிய காரியம் அல்ல. ஆகவே கொஞ்சம் காலம் ஆகத்தான் செய்யும்.

ஆம்பூரில் குடிநீர் சுத்திகரிப்பு ஆலை.

*322—(*வினா எண் 3074)* **திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூரில் குடிநீர் சுத்திகரிப்பு ஆலை தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர் நகரில் உள்ள குடிநீர்த் திட்டத்தைப் பாதிக்கின்ற வகையில் அங்கே உள்ள பாலாற்றில் தோல் கழிவு நீர் கலக்கப் பட்டுவிடுவதால் அந்தத் தண்ணீர் உப்புத் தண்ணீராகப் போய் விடுகிறது. மேலும் அந்தத் தண்ணீரைக் குளிப்பதற்குப் பயன படுத்துவதன் காரணத்தால் தோல் வியாதிகள் எல்லாம் வருகின்றன. எனவே மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக இதனைப் போக்க உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு முன்னதாக, அந்தத் தண்ணீரைப் பருகுவதற்கும், குளிப் பதற்கும் தடை விதித்துவிட்டு நிவாரண வேலையை அரசு முடுக்கிவிடுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

1987 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூரில் இயங்கி வருகிற குடிநீர்த் திட்டத்தின் கீழ் இப்போது சுத்திகரிப்பு ஆலை தொடங்கும் திட்டம் எதுவும் இல்லை. ஆனால் தோல் கழிவு நீரகற்றும் கூட்டுறவு ஆலை ஒன்று மட்டும் அந்தப் பகுதியில் இயங்க ஏற்பாடு ஆகி இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, எவ்வளவு ரூபாய் செலவில் இது இயங்க இருக்கிறது? மேலும் இப்போது அந்தப் பகுதியில் உள்ள தண்ணீர் கெட்டுவிட்ட காரணத்தால் திருப்பத்தூர் பகுதியிலிருந்து தண்ணீர் எடுத்தால் நல்லது. ஏனென்றால் அந்தத் தண்ணீர் கெடாமல் இருக்கிறது. அதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா? மேலும் தோல் தொழிற்சாலைகளால் தான் இவ்வாறு தண்ணீர் கெடுகிற சூழ்நிலை இருப்பதால் அந்தத் தோல் தொழிற்சாலைகளிடமிருந்து இந்தக் குடிநீர்த் திட்டத்திற்காக ஒரு தொகையை, அதாவது ஒரு பங்கை வசூலித்து எல்.ஐ.சி. அல்லது உலக வங்கியின் மூலமாக நிறைவேற்றுகின்ற வகையில் விசேஷத் திட்டத்தை அரசு தீட்டி இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, 2 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு பொது சுத்திகரிப்பு பிரிவு அமைப்பதற்காக ரிச்சர்ட்ஸ் அண்ட் க்ரூடாஸ கம்பெனியால் தயாரிக்கப்பட்ட அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டிருக்கிறது. தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இந்தத் திட்டத்தினைக் கண்காணித்து வருகிறது.

திரு. கி. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றைச் சுற்றியிருக்கிற பகுதிகளைப் பொறுத்தவரையில், குறிப்பாக நாட்ராம்பள்ளி தொகுதியிலிருந்துதான் அந்தப் பகுதியினைச் சுற்றியிருக்கிற அனைத்து நகராட்சிகளுக்கும், இரயில்வே நிலையத்திற்கும், சர்க்கரை ஆலைக்கும் குடிநீர் எடுக்கப்படுகிறது. இப்போது அந்தப் பகுதி பாதிக்கப் பட்டிருக்கின்ற சூழ்நிலை இருப்பதால் குடியாத்தத்தில் மண்ணாத்தூர் பகுதியிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

திரு. க. நரசிம்மபல்லவன்: பேரவைத் தலைவர் அவர்களே, கடல் நீரைச் சுத்திகரிப்பு செய்து குடிதண்ணீராகக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. த. பழனி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வடாற்காடு மாவட்டத்தில் இருக்கிற ஆம்பூர் பகுதிக்கு மட்டும் சொன்னார்கள். வடாற்காடு மாவட்டத்தில் இருக்கிற அனைத்து நகராட்சிகளுக்கும், குடிநீர் பாலாற்றிலிருந்துதான் வழங்கப்படுகிறது. ஊராட்சி மன்றங்கள் ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள் எல்லாம் குடிநீர் திட்டங்களை பாலாற்றிலிருந்து தான் நிறைவேற்றி இருக்கின்றன. இதற்காக அரசு பல கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறது. அந்தக் குடிநீர்த் திட்டங்கள் எல்லாம் தற்போது பாழடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்படி பல கோடி ரூபாய் அளவுக்கு திட்டங்கள் தீட்டிக் கொடுக்கப்படுகிற குடிநீர், பாலாற்றில் தோல் கழிவு நீர் கலக்கப்படுவதன் காரணத்தால் கெட்டுப் போய்விடுகிறது. எனவே குடிநீருக்காக மிகப் பெரிய திட்டங்களைத் தீட்டுவதைக் காட்டிலும் பாலாற்றில் கலக்கிற அந்தத் தண்ணீரைத் தடுத்து நிறுத்தினாலே அங்கேயிருக்கிற அந்த பாலாற்றுத் தண்ணீரைக் குடிக்கின்ற மக்கள் அரசுக்கும் அமைச்சருக்கும் நன்றி சொல்வார்கள். அதை அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பற்றி ஆலோசிக்கலாம்.

மணலி புழல் பகுதியில் தூய்மையான குடிநீர்.

323—(*வினா எண். 4204) **திரு. ஜி. கே. ஜெ. பாரதி:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையை அடுத்துள்ள மணலி, புழல் பகுதி மக்களுக்கு தூய்மையான குடிநீர் கிடைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?